செய்தி வெளியீடு எண் : 956 நாள் : 05.05.2025

# செய்தி வெளியீடு

## இந்திய மீனவர்களின் பாதுகாப்பை உறுதி செய்திடவும், மீனவர்கள் மீதான தாக்குதல்கள் மீண்டும் நிகழாமல் தடுக்கவும், கைப்பற்றப்பட்ட மீன்பிடிப் படகுகளை உடைத்து வேறு தேவைகளுக்கு பயன்படுத்துவதை தடுக்கவும் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வலியுறுத்தி மாண்புமிகு வெளியுறவுத் துறை அமைச்சர் திரு. எஸ். ஜெய்சங்கர் அவர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் கடிதம்

-------

இலங்கை கடற்படையினரால், தமிழ்நாட்டின் கடலோர மீனவ மக்களிடையே பெரும் துயரத்தை ஏற்படுத்தி வரும் சில பிரச்சனைகள் குறித்தும், அதனை தடுத்திட தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வலியுறுத்தி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் மாண்புமிகு ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் திரு. எஸ். ஜெய்சங்கர் அவர்களுக்கு இன்று (05.05.2025) கடிதம் எழுதியுள்ளார்.

**1) இந்திய மீனவர்கள் மீது தொடர்ச்சியாக தாக்குதல்கள்:**

சமீப காலமாக இந்திய மீனவர்கள் மீது அடையாளம் தெரியாத இலங்கையைச் சேர்ந்த நபர்களால் தாக்குதல் நடத்தப்படும் சம்பவங்கள் அதிகரித்து வருகிறது என்று குறிப்பிட்டுள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், கடந்த மே 2 ஆம் தேதி நாகப்பட்டினம் மாவட்டத்தின் கடலோர கிராமங்களைச் சேர்ந்த 23 மீனவர்கள் மற்றும் அவர்களது 5 நாட்டுப் படகுகள் கடலில் அடையாளம் தெரியாத இலங்கையைச் சேர்ந்தவர்களால் வெவ்வேறு சம்பவங்களில் தாக்கப்பட்டனர் என்றும் அவர்களின் ஜிபிஎஸ் கருவிகள், கைப்பேசிகள், வி.எச்.எப் உபகரணங்கள், ஐஸ் பெட்டிகள், இயந்திர பாகங்கள், இன்வெர்ட்டர் பேட்டரிகள், அடுப்பு, சுமார் 470 கிலோ மீன்பிடி வலைகள், தங்கம் மற்றும் வெள்ளி நகைகள் போன்ற தனிப்பட்ட உடமைகளும் பறிக்கப்பட்டன என்றும் தெரிவித்துள்ளார். மீனவர்களின் வாழ்வாதாரத்தை பாதிக்கும் இதுபோன்ற சம்பவங்ள் மீண்டும் நிகழாமல் இருக்கவும், தாக்குதல் நடத்தியவர்கள் இதுபோன்ற செயல்களில் ஈடுபடுவதைத் தடுக்கவும், இந்தியாவிலும் இலங்கையிலும் உள்ள தொடர்புடைய அதிகாரிகளிடம் இப்பிரச்சனையை எடுத்துச் சென்று உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள தனது கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்.

**2) பறிமுதல் செய்யப்பட்ட படகுகளை சேதப்படுத்தாமல் திரும்ப வழங்குதல்:**

இலங்கை மீன்பிடி மற்றும் நீரியல் வளங்கள் துறை (DFAR) பரிந்துரைக்கு ஏற்ப, செயற்கை பவளப்பாறை அமைப்புகளை உருவாக்கும் திட்டத்தின் ஒரு பகுதியாக, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் இந்திய மீனவர்களிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட 34 மீன்பிடிப் படகுகளை உடைத்து கடலில் மூழ்கடிக்க உள்ளதாகவும், மீன்பிடி படகுகளை நம்பியுள்ள மீனவர்களின் வாழ்வாதாரத்திற்கு இதனால் பேரிழப்பு ஏற்படுவதைத் தவிர்க்கவும்,

தமிழக மீனவர்களிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட படகுகளை இலங்கை அரசு திரும்ப ஒப்படைக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் தனது கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்.

**3) விடுவிக்கப்பட்ட படகுகளை விரைந்து திரும்ப வழங்க நடவடிக்கை:**

05.05.2025 அன்றைய நிலவரப்படி, தமிழக மீனவர்களுக்குச் சொந்தமான 229 மீன்பிடிப் படகுகள் இலங்கை அரசின் கட்டுப்பாட்டில் உள்ளன என்று சுட்டிக்காட்டியுள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இலங்கை நீதிமன்றங்களால் விடுவிக்கப்பட்ட 12 மீன்பிடி படகுகளுடன் 101 மீனவர்களையும், 14 மீட்புப் படகுகள் மூலம் இந்தியாவிற்கு கொண்டுவதற்கு ஏற்கனவே தமிழ்நாடு அரசு மத்திய அரசுக்கு அனுப்பியுள்ள கருத்துருவிற்கு ஒன்றிய வெளியுறவு அமைச்சகம் விரைவில் நடவடிக்கை எடுத்து உதவுமென்று நம்புவதாக தனது கடிதத்தில் குறிட்டுள்ளார்.

இந்த முக்கியப் பிரச்சினைகளை இலங்கை அரசிடம் எடுத்துச் சென்று, இந்திய மீனவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும், இதுபோன்ற தாக்குதல்கள் மீண்டும் நடைபெறாமல் தடுக்கவும், கைப்பற்றப்பட்ட மீன்பிடிப் படகுகளை சேதப்படுத்தி கடலில் மூழ்கடிப்பதைத் தடுக்கவும், இலங்கை அரசால் கைது செய்யப்பட்ட மீனவர்களையும், 229 மீன்பிடிப் படகுகளையும் மீட்டுக் கொண்டு வருவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் விரைந்து எடுக்கவும் வலியுறுத்தி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்களுக்கு எழுதியுள்ள கதடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்.

----

**Text of the D.O. Letter of Hon'ble Chief Minister of Tamil Nadu Thiru M.K. Stalin addressed to Hon'ble Union Minister of External Affairs Dr. S. Jaishankar to ensure the security of Indian fishermen and to prevent the recurrence of attacks, and to stop the scuttling of apprehended fishing boats and to take all necessary steps to bring back 229 fishing boats apprehended by Sri Lanka**

I wish to bring to your immediate attention some issues that have been causing considerable distress amongst the coastal communities of Tamil Nadu.

**1) Repeated instances of attacks on fishermen**

Of late, there has been an increase in the number of attacks on Indian fishermen by Sri Lankan nationals. On the 2$^{nd}$ of May, 23 fishermen from the coastal villages of Nagapattinam District and their five country boats were attacked at sea by unidentified Sri Lankan nationals in separate incidents. Their GPS devices, mobile phones, VHF equipment, ice boxes, engine components, inverter batteries, stove, approximately 470 kg of fishing nets, and personal belongings such as gold and silver jewellery were

snatched away. I request you to take this up urgently with the authorities concerned, both in India and Sri Lanka, so that such instances threatening lives and livelihoods do not occur again and the attackers are deterred from indulging in such acts.

**2) Decision on confiscated boats by the Sri Lankan Government**

It has been reported that Sri Lanka's Department of Fisheries and Aquatic Resources (DFAR) has formally recommended the scuttling of 34 Indian boats confiscated in 2022 and 2023 as part of a project to develop artificial reef ecosystems. The loss of fishing boats will be detrimental to the livelihood of fishermen. I request the Government of India to prevail upon the Sri Lankan Government to not scuttle the boats seized from our fishermen and also to ensure the return of boats to the fishermen.

**3) Support for salvage boats**

As of 05.05.2025, 229 fishing boats belonging to fishermen from Tamil Nadu are under the custody of Sri Lanka. The Government of Tamil Nadu had sent a proposal to the Union Government for the repatriation of 12 fishing boats that were released by Sri Lankan Courts, and to obtain clearance for 14 salvage boats along with 101 fishermen to facilitate the recovery of these vessels. We hope the External Affairs Ministry will facilitate this at the earliest.

I earnestly urge you to take up these pressing issues with the Government of Sri Lanka, to ensure the security of Indian fishermen and to prevent the recurrence of such attacks, to stop the scuttling of apprehended fishing boats and to take all necessary steps to bring back 229 fishing boats apprehended by Sri Lanka.

------

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu